Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# தமிழ் அலை

Tamilalai

தினசரி

அதிநவீன தொழில்நுட்பத்தில்
உங்கள் அச்சுப்பதிப்புக்களை
(கறுப்புவெள்ளை, கலர்)
விரைவாக செய்து கொள்ள
நீங்கள் தெரிவுசெய்ய வேண்டிய
ஒரே இடம்:
நித்தி பதிப்பகம்
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை
தொலைபேசி. 065. 2226110

அலை - 01 08-01-2004 வியாழக்கிழமை ஒலி - 94

## யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து முழுமையாக விலகிக் கொள்வதாக அரசாங்கம் அறிவிப்பு

### நிதி வழங்கும் நாடுகளுக்கும் அறிவிப்பு

(நமது நிருபர்)

பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கா அவர்களும் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து தான் முழுமையாக விலகிக் கொண்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இம்முடிவு நேற்று 7ம் திகதி பண்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியில் நடந்த மக்கள்



சந்திப்பில் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்களால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரின் இம் முடிவு டோக்கியோ நிதி வழங்கும் நாடுகளுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கிழக்கு பொங்குதமிழ் பிரசார பணி ஆரம்பம்

(ந.கிரிதரன்)

கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் இம்மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான பிரசாரப் பணிகள் புதன்கிழமை முதல் முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தேசிய கல்விக் கல்லூரி,ஆசிரியர்பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் இணைந்து கிராமம் கிராமமாகச் சென்று ஒலி பெருக்கி மூலம் பிரசாரங்களை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொங்குதமிழ் நிகழ்வுகளில் 10ம் வகுப்புக்கு கீழ்பட்ட மாணவர்களை கலந்துகொள்ள அனுமதிப்பதில்லையென்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தமிழ்பேசும் நாடாளுமன்ற

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# நயினாக்காட்டில் ஆயுதக்குழுவால் தமிழர்களுக்கு கொலை மிரட்டல்

## 30 செங்கல் அறுவடை தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேற்றம்

(உதயன்)

**சம்மாந்துறை நயினாக்காட்டில் செங்கல் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருந்த தமிழ் தொழிலாளர்கள் புதன்கிழமை அதிகாலை ஆயுதக்குழுவொன்றினால் மிரட்டி வெளியேற்றப்பட்டுள்ளனர்.**

இச்சம்பவம் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களிடையே பெரும் அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள நயினாக்காட்டில் மட்டக்களப்பு, மற்றும் வீரமுனையைச் சேர்ந்த தமிழ் தொழிலாளர்கள் முஸ்லிம் நபர்களுடைய செங்கல் வாடிகளில் தொழில் புரிந்து வருகின்றனர்.

புதன்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் துப்பாக்கிகளுடன் சென்ற பத்து பேர் கொண்ட குழுவினர் செங்கல் அறுவைத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களின் வாடிகளுக்குள் புகுந்து அவர்களை மிரட்டியுள்ளனர். எங்களது எச்சரிக்கையையும் மீறி நீங்கள் தொழிலில் ஈடுபட்டால் உங்களை கொலை செய்து விடுவோம்'' என மிரட்டியதுடன் செங்கல் வாடிகளின் சொந்தக்காரர்களான முஸ்லிம்கள் சிலரை பிடித்து தாக்கியுள்ளனர்.

''நீங்கள் இங்கே தமிழர்களுக்கு வேலை கொடுத்தால் உங்களையும் கொலை செய்து விடுவோம்'' என எச்சரித்துள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து சுமார் முப்பது தமிழ் தொழிலாளர்கள் உயிர்தப்பினால் போதும் எனக் கூறிக் கொண்டு அச்சம் கார

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## சித்தாண்டியில் நுண்கலை பயிற்சிக் கல்லூரி திறப்பு

(எம்.யுவராஜ்)

சித்தாணடியில் எதிர்வரும் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மூன்றாவது நுண்கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளது.

சித்தாண்டி பிரதேச மாணவர்களின் எதிர்கால வளர்ச்சியினை நோக்கமாகக் கொண்டு மட். அம்பாறை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. செங்கலடி, வந்தாறுமூலை, சித்தாண்டி முறக்கொட்டாஞ்சேனை, சந்திவெளி, மாவடிவேம்பு ஆகிய பிரதேச மாணவர்கள் இச் செயற்பாட்டினை பயனுடையதாகப் பயன்படுத்தலாம் என்றும்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

கோலாகல திறப்பு விழா!

வாசகர்கள் வசதி கருதி மட்டு மாநகரத்தினுள்

தமிழ்அலை

பிராந்திய பணிமனை
திறப்பு விழா!

காலம்:- 14.01.2003 புதன்கிழமை
நேரம்:- காலை 10.00 மணிக்கு
இடம்:- 240, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

வாசகர்கள், அபிமானிகள்,
ஆதரவாளர்கள், ஊடகவியலாளர்கள்,
விளம்பரதாரர்கள், வர்த்தகர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

தமிழ்அலை தமிழ்பேசும் மக்களின் உணர்வலை

## போடியார் பொறி வெடி

அரச பயங்கரவாதத்திற்கு வெள்ளிவிழா

-செய்தி-



**வைர விழா முடிஞ்சாலும் இந்த சட்டம் இங்க தொலையாது..**

## மட்.தலைமை பேராளராக மைக்கல் கிளிடன்

(ந.கிரிதரன்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு பிராந்திய தலைமைப் பேராளராக ஜெனீவாவைச் சேர்ந்த மைக்கல் கிளிடன் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து பொறுப்பேற்றார்.

ஏற்கனவே தலைமை பேராளாரகக் கடமையாற்றிய ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த செல்வி பிலிப்பினோ பிரியாவிடைபெற்று நாடு திரும்பினார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஓட்டமாவடியில் கொலை குற்றச்சாட்டில் கைதான பெண் பிணையில் விடுதலை

(ந.கிரிதரன்)

அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து திருட முயன்ற ஒருவரை கொலை செய்ததான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளம் குடும்பப் பெண்மணி பிணையில் விடுமாறு சமர்ப்பிக்கப்பட்ட மனுவை ஏற்று மட்டக்களப்பு நீதவான் எம். எச்.எம். அஜ்மீர் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

இம்மாதம் 3ம் திகதி ஓட்டமாவடி செம்மண்ஓடை பேக்கரி வீதியைச் சேர்ந்த திருமதி அப்துல் முத்தலீவ் தபீக்கா என்பவர் இரவு 10.00 மணியளவில் வீட்டு கூரை ஓட்டைப் பிரித்து வீட்டிற்குள் இறங்கிய ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்ததாக பொலீசுக்கு அளித்த வாக்குமூலத்தையடுத்து கைது செய்யப்பட்டு இம்மாதம் 14ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

எனினும் செவ்வாயன்று, இறந்தவர் பலாத்காரம் செய்ய முற்படவே தற்காப்புக்காக கத்தியால் குத்தியதாக விசாரணைகள் மூலம் தெரியவந்ததாக பொலிசார் மன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

சம்பவத்தில் இறந்தவர் அப்துல்சலாம் இர்சாத் என்பவரோடு கொள்ளையிட வந்த முர்த லெவ்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

தமிழ் அலை
Tamilalai
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065. 2226110
தொலைநகல:- 065. 2226110
மின்னஞ்சல்:- tamilalai32@yahoo.com.
இணையத்தளம்:- www.tamilalai.net

08.01.2004

## தடையை நீக்க வேண்டும்

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகள் மீது அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகள் விதித்திருக்கும் தடையினை நீக்கி சமாதானத்திற்கான பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

சிங்கள இனவாத அரசியல் தலைமைகள் உலகளாவிய ரீதியில் மேற்கொண்ட விசமப் பிரசாரங்கள் ஒரு காலத்தில் மெய்ப்பிக்கப்பட்டது.

சிங்களப் படைகள் சிறிலங்கா தேசத்தில் நடாத்திய இன அழிப்பு நடவடிக்கைகள், பாலியல் வன்புணர்வு போன்ற சம்பவங்கள் கட்டுக்கடங்காது போன நிலையில் சிங்கள இனவாத அரசுகள் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக முத்திரை குத்தியதன் விளைவு அமெரிக்கா விடுதலைப்புலிகளை தடை செய்த அமைப்புக்களின் பட்டி யலில் இணைத்துக் கொண் டது.தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக விளங்கு வது மட்டுமன்றி கல்வி, பொருளாதார, கலை கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாப்பதிலும் முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் காப்பரணாக விளங்கும் விடுதலைப்புலிகள் அமைப்பில் வலிந்து வந்து படைய ணியில் இணையும் சிறார்களை மீளப் பெற்றோரிடம் ஒப்படைப்பதில் விடுதலைப்புலிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். கடந்த 2003ம் ஆண்டு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இவ்வாறு இணைய வந்த சிறார்கள் யுனிசெப் பிரதிநிதிகள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் முன்னிலையில் பல தடவைகள் ஒப்ப டைக்கப்பட்டனர்.

எனினும்சிலரது தவறான பிரசாரங்கள்காரணமாக அமெரிக்கா இன்றும் விடுதலைப்புலிகளைத் தவறான கோணத்தில் சிந்திக்கிறது. தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் தான் என்னும் தத்துவத்தை நிலை நிறுத்தும் வகையில் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்.

### இன்றைய நாள்

சூரி ~ காலை 06:32 மாலை 06:00
ராகு ~ ந.ப 01:42 பி.ப 03:08
எம ~ காலை 06:32 காலை . 07:58
தெய்.முகூ ~ மு.ப.11:18 ந.ப 12:16
நக்ஷ ~ தியா காலை 06:32 காலை 07:11
பி.இ ~ 02:51 ~ வைகறை 04:33
திதி ~ மு.இ 10:55 வரை பிரதமை
நக்ஷ மாலை 06 : 19 ~ வரை புனர்பூசம்
சு.யோகம் ~ முழுவதும் அமிர்தம்
சிராத்தம் ~ மார்கழி மாத அ.பிரதமை
பிறந்ததின வழிபாடு:~ புனர்பூசம்

# மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வறுமைத் தணிப்பு நடவடிக்கையில் "டேபா" வின் பங்களிப்பு - ஓர் ஆய்வு.

**வி. மைக்கல் கொலின் BBA (சமூக உணர்வூட்டாளர் வங்கியியல்)**

இன்று உலகின் மிக முக்கிய பிரச்சினைகளில் இதுகால வரை தீர்க்கப்பட முடியாத ஒரு பிரச்சினையாக இருப்பது வறுமையாகும். இந்த வறுமை என்ற கொடிய நோயை முற்றாக அழித்து விட முடியாவிட்டாலும் அதனைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளில் உலகமே குறியாக நிற்கின்றது. உலக சனத்தொகையில் 57 வீதத்திற்கு மேற்பட்டோர் மிகக் கூடிய வறுமை நிலையில் உள்ளனர் என அறிக்கையிடும் உலக வங்கி ‘‘குடிசை வாழ் பகுதிகள் எல்லா நாடுகளிலும் சகஜமாகவே காணப்படுகின்றன” எனவும் கூறுகின்றது.

வறுமையைக் குறித்து கவலை தரும் அறிக்கைகளே உலகமெங்குமிருந்து வந்து கொண்டிருந்தாலும் திட்டவட்டமான ஒன்றைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். உதாரணமாக ‘‘இன்னும் இருபத்தைந்து வருடங்களில் வறுமையை ஆசியா அடியோடு ஒழிக்க முடியும்” என ஆசிய முன்னேற்ற வங்கி அறிக்கை செய்ததாக ‘‘மனிலா புல்லட்டீன்” என்ற பிலிப்பைன்ஸ் நாட்டுப் பத்திரிகை தலைப்புச் செய்தி கூறியது. வறுமை எனும் படுகுழியிலிருந்து மக்களைத் தூக்கி விடுவதற்காக பொருளாதார வளர்ச்சியை ஒரு வழியாக இந்த வங்கி பரிந்துரைக்கின்றது. வறுமை ஒழிப்பு தொடர்பாக இங்கிலாந்து நாட்டின் மஞ்செஸ்டர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான கலாநிதி டேவிட்ஹியூம் ‘‘வறுமை ஒழிக்கப்படுவதற்கு எமக்கு நல்ல பொருளாராத சமூக நலத் திட்டங்களை வகுக்கக் கூடிய அரசு தேவை. இவ்வகையான அரசு பாரிய தொழில் பேட்டைகளை உருவாக்கி வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தரம் வாய்ந்த கல்வி, சுகாதாரத் திட்டங்களை அது நடைமுறைப்படுத்த வேண்டும். காணிச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு விவசாயத்துறையில் தன்னிறைவு காணும் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். இந்நடவடிக்கைகளினால் மட்டுமே வறுமையை ஒழிக்கலாம்”எனக் கூறுகின்றார்.

இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் அரசினாலும், அரசு சாரா நிறுவனங்களினாலும் வறுமை ஒழிப்பு நடவடிக்கையில் பல செயற்திட்டங்கள் முன்வைக்கப்பட்டு அவை வெற்றிகரமாக நடாத்தப்பட்டும் வருகின்றன. அந்த வகையில் இலங்கையில் காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வரும் அரசுகள் புதிய புதிய பெயர்களில் வறுமை ஒழிப்பு தொடர்பான பல புதிய திட்டங்களை முன்வைத்தும் இலவசக் கல்வி, இலவச சுகாதார வசதி, விவசாயக்கடன்கள் என பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. ஆனால் அது போரினால் சின்னாபின்னப்பட்டு மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களில் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்ற வினாவும் இங்கு எழாமல் இருக்க முடியாது.

இந்தப் பின்னணியில் தான் நாம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வறுமை ஒழிப்பு நடவடிக்கையாகக் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக அமுல்படுத்தப்பட்டு வரும் அரசு சார்ந்ததும் நோர்வே நாட்டின் நிதி உதவியுடன் இயங்குவதுமான டேபாவின் சமூக நலத் தயாரிப்புத் திட்டச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய வேண்டியுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களை இனங்கண்டு அவர்களிடையே சுயவளர்ச்சிக்கான உணர்வூட்டல் செயற்பாட்டினை மேற் கொள்வதன் மூலம் அவர்களை உழைக்கும் சந்ததியாக உருவாக்கி இதனூடாக அவர்களது வறுமையினைக் குறைத்து அவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே சமூக நலத் தயாரிப்புத் திட்டமாகும். இச்சமூக பொருளாதார நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வறிய மக்களது வாழ்வாதாரத்தின் அனைத்து நிலைகளிலும் அவர்களுக்குப் பக்கபலமாக நின்று அவர்களின் வளர்ச்சிக்கு உந்து சக்தியளிப்பதே இதன் பிரதான குறிக்கோளாகும்.

இக்குறிக்கோளினை அடையும் முகமாக ஆரம்பப் படிநிலையாக மக்களிடையே உணர்வூட்டல் செயற்பாட்டினை மேற்கொண்டு அதன் மூலம் அவர்களது மனப்பாங்கும், நடத்தையும் (Attitude & Behavior) மாற்றப்பட்டு, மாற்றத்தின் பின் அவர்களது ஜீவனோபாயத்தின் மீதான சேமிப்புப் பழக்கத்தினை தூண்டுவதன் மூலம், வீண் விரயங்கள், செலவுகள் என்பன தவிர்க்கப்பட்டு அவர்களது சேமிப்புகள் மூலமான மூலதன ஆக்கத்தினைக்கொண்டு அவர்களைச் சுற்றியுள்ள வளங்களை உற்பத்தியாக்கப் பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபாடு கொள்ளச் செய்வதன் மூலமாக அவர்களுடைய வருமான மட்டத் தினை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே குழுச்சேமிப்புத் (Producer Groups) திட்டமாகும்.

குழுச் செயற்பாட்டினை மேலும் விரிவுபடுத்தி தங்களது வருமானத்தினை கணிசமானளவு அதிகரிப்புச் செய்வதற்காகவும், இலகுவாக இதற்கான நிதிவளங்களைப் பெறும் முகமாகவும் இந்தத் திட்டத்தின் முக்கிய நடவடிக்கையாக சுயவங்கிச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழு சேமிப்புத் திட்டத்தில் வெற்றிகரமாகச் செயற்படுகின்ற பயனாளிகளை அடையாளங்கண்டு குழு உறுப்பினர்களைப் படிப்படியாக சுயவங்கிச் சங்கத்தினுள் உள்வாங்குவதற்கரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இச்சங்க உறுப்பினர்கள் அவசியம் ஏற்படும் பட்சத்து தமது சுயதொழில் முயற்சிகளுக்கு மேலும் வலுச் சேர்க்கும் முகமாக வங்கியில் இருந்து கடன் வசதியைப் பெறக்கூடிய வகையிலும் கிராமிய ரீதியாக ஆரம்பிக்கப்பட்டதே இச்சுயவங்கிச் சங்கமாகும்.

1989ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் ஆரம்பத்தில் ERO (Eastern Rehabilitation Organization) நிறுவனத்தினாலும், அதனைத் தொடர்ந்து BIRRP ( Batticaloa Integrated Rehabilitation and Reconstruction Programme) திட்டத்தினாலும் நிர்வகிக்கப்பட்டு 1998ம் ஆண்டு டேபாவிற்கு (DERBA ) Development and Rehabilitation Programme For Batticaloa) பொறுப்பளிக்கப்பட்டது. இருந்தும் இதன் திட்ட அமுலாக்கம் 2001ம் ஆண்டு வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்தது.

இதனை மீளமைக்கும் பொருட்டு 2002ம் ஆண்டு புதிய பணிப்பாளரின் பணிப்பின் பேரில் ஒரு தந்திரோபாய அறிக்கை (Strategy Plan) டேபா திட்ட அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி 2004ம் ஆண்டினுள் அதற்கான முழு நோக்கமும் அடையப்படும் எனவும் வறுமையினால் இனங்காணப்பட்ட 45,000 குடும்பங்களும் உள்வாங்கப்பட்டு தொடர்ந்தேர்ச்சியாக இதன் மூலம் வறுமைப்பட்ட மக்கள் பயன் அடைவர் எனவும் கூறப்பட்டு இருந்தது. மேலும் இத் திட்டமானது பேண்தகு நிலையை அடைவதற்கான வழி முறைகளும் அதில். முன்வைக்கப்பட்டிருந்தது.

இதன்படி 2002ம் ஆண்டு முற்பகுதியில் மேற்படி தந்திரோபாய அறிக்கை நொராட்டினால் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வறி க்கையில் கூறப்பட்டதற்கமைவாக இந்த சமூக நலஅபிவிருத்தித் திட்டத்தினை மீளமைக்கும் பணிகளும் நடைபெற்றன. இக்காலப் பகுதியில் டேபாவின் புதிய பணிப்பாளராக பொறுப்பேற்றிருந்த திரு.க.பாக்கியராசாவின் துரிதமான செயற்பாட்டினாலும் அவர் அறிமுகப்படுத்திய தந்திரோபாய முகாமைத்துவச் செயற்பாட்டின் மூலமம் சமூக நலத் தயாரிப்புத் திட்டம் புதிய அணுகு முறையில் விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் சுயவங்கிச் சங்கங்கள் (Self Banka Societies) ஏற்படுத்தப்பட்டு இலக்குக்கு உட்பட்ட சகலரும் இவ்வங்கி அமைப்புக்குள் உள்வாங்கப்படும் பணிகள் விரிவுபடுத்தப்பட்டது. 7000 பேர் வரை மாத்திரமே 10 வருடத்தினுள் உள்வாங்கி இருந்த சங்கங்கள் 2002ம் ஆண்டு பிற்பகுதியில் 17,000 பேர் ஆக உள்வாங்கப்பட்ட நிலைமை ஏற்பட்டிருந்தது.

மாவட்டம் தோறும் உருவாக்கப்பட்ட 72 சுயவங்கி அமைப்புக்கும் ஒவ்வாரு வங்கிக்கும் ஒவ்வொரு சமூக நல அலுவலரும் (Social Mobilizing officer - SMO) ஒவ்வொரு சுயவங்கி இயக்குனரும் (Self Bank Operator - SBO) நியமிக்கப்பட்டனர். இத்திட்டத்தினை விரிபுபடுத்தும் முகமாக பயிற்சிகள் முன்வைக்கப்பட்டு அதற்கான அங்கீகாரமும் நொராட்டிடம் இருந்து கிடைக்கப்பெற்றது. அதன் படி,

01. சகல சமூக நலத்திட்டச் செயற்பாடுகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 சமூக நல அலுவலர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் பயிற்றுவிப்பாளர்களாக மாற்றப்பட்டனர்.
02. அனைத்து சமூக நல அலுவலர்களுக்கும் சமூக நலத்திட்டச் செயற்பாடுகள்தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன.
03. வங்கி நடைமுறையை ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு சமூக நல அலுவலர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.
04. முக்கியமாக இத்திட்டத்தின் நோக்கம் முற்றுமுழுதாக மக்களை சென்றடையும் முகமாக மக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 2,640 பேருக்கு உள்ளக இடையீட்டாளர்கள் எனும் பாணியில் ( Internal Beneficiaries Training) நிறைவான பயிற்சி வழங்கப்பட்டது.

மேற்படி பயிற்சிகள் யாவும் இத்திட்டத்தினை மேலும் உன்னதமான நிலையில் கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. உள்ளக இடையீட்டாளர்களுக்கான பயிற்சிகள் மூலம் சங்க உறுப்பினர்கள் மாத்திரமல்லாது சம்பந்தப்பட்ட அனைத்து மக்களும் இதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர். அதன்படி இவ்வருடத்தினுள் (2003) மாத்திரம் 20,000 பேரை இத்திட்டத்தினுள் உள்வாங்கும் அளவிற்கு இத்திட்டம் வளர்ச்சி அடைந்துள்ளது. இதன்படி கடந்த 02 வருடத்தினுள் இத்திட்டத்தினது வளர்ச்சிப் போக்கு 83 வீத மாக பதியப்பட்டது.

குறிக்கப்பட்ட ஒவ்வொரு சுயவங்கிச் சங்கமும் 400 - 700 அங்கத்தவர்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. வேலை வாய்ப்பற்றவர்களுக்கான தொழில் முயற்சிகள் கணிசமான அளவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2004ம் ஆண்டு வங்கியில் உள்வாங்கப்பட வேண்டிய சகல அங்கத்தவர்களும் உள்வாங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் தொடர்கின்றன. தற்போதைய நிலையில் குழுக்களாக இணைந்துள்ள 37,500 பேரில் இருந்து 26,000 பேர் சுயவங்கி உறுப்பினர்களாகவும் அங்கத்துவம் பெற்றுள்ளனர். அவர்களது தொழில் விருத்தியினை மேம்படுத்தும் பொருட்டு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் யாவும் சங்க உறுப்பினர்களாலேயே தெரிவு செய்யப்படுகின்றனர். இச்சங்கங்கள் ஒவ்வொன்றிலும் அவர்களினால் ஏற்படுத்தப்பட்டகடன் கண்காணிப்புக் குழு சம்மந்தப்பட்ட அங்கத்தவர்கள் கடன் பெற்றதும் அவர்களது தொழில் சார் நடவடிக்கைகள் சம்மந்தமான கண்காணிப்புக்களை மேற்கொள்கின்றது. கடனுக்காக விண்ணப்பிக்கும் நேரங்களிலும் இச்சங்கத்திற்கு சம்மந்தப்பட்ட நபர் சார்பான சகல விபரங்களையும் இக்கண்காணிப்புக் குழு வங்கிக்கு வழங்குகின்றது. இதனால் இச்சங்கத்தில் இருந்து பெறப்படுகின்ற கடன்கள் அனைத்தும் உரிய நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்படுவதுடன் உரிய தொழில் நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவ்வருட இறுதி வரை 5,173 பேருக்கு இதுவரை சுயதொழில் முயற்சிகளுக்கு என கிட்டத்தட்ட 37 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டம் தோறும் இயங்கி வரும் சுயவங்கிச்சங்கங்கள் வறுமை தணிப்பு நடவடிக்கையோடு மட்டும் நின்று விடாமல் தனது சக்திக்கு உட்பட்ட வகையில் சகல விதமான சமூகச் செயற்பாடுகளிலும் அக்கறை செலுத்தி வருகின்றதும் குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் பாலர் பாடசாலைகளை நடாத்துதல், தையல் பயிற்சி நிலையங்களை நடாத்துதல் போன்ற பல செயற்பாடுகளைக் குறிப்பிட முடியும். அத்துடன் வாராவாரம் ‘‘நெம்பு கோல்” என்ற பெயரில் டேபாவினால் ஒரு செய்தி மடலும் வெளியிடப்படுகின்றது. இதில் ஒவ்வொரு சுயவங்கியினதும் செயற்பாடுகள் பதியப்படுகின்றது. குறிப்பிடத்தக்கதாகும்.

# ஜனாதிபதி பிரதமர் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டு பேச்சை தொடர வேண்டும்

## கலாநிதி விக்கிரமபாகு ஆலோசனை

(நமது நிருபர்)

புரிந்துணர்வு உடன்படிக்கையை தொடர்ந்து அமுல்படுத்துவதற்கும் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் பிரதமர் எழுத்து மூலமான உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடவேண்டும் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவ்வாறு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்ட பின்னர் பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றமை குறித்து கவலை கொள்ளத் தேவையில்லை என்றும் விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சுக்களை இலகுவான முறையில் தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்றும் அவர் பிரதமரிடம் எடுத்துக்கூறியுள்ளார்.

புதிய இடது சாரி முன்னணி, நவசமசமாஜகட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பகல் சந்தித்து நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார்.

அப்போது கருத்து வெளியிட்டபோதே விக்கிரமபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார். பிரதமரின் அலரிமாளிகையில் சுமார் ஒன்றரை மணி நேரமாக இடம்பெற்ற கலந்துரையாடலில் நவசமசமாஜ கட்சியின் பொதுச்செயலாளர் வாசுதேவ நாணயக்கார, கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இந்திக குணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரதமருடன் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ராஜித சேனாரத்ன மற்றும் பிரதமரின் செய லாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகி யோரும் கலந்துகொண்டனர்.

அந்த சந்திப்பில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட விக்கிரமபாகு கருணாரத்ன:-

சமாதான பேச்சுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கையும் தொடர்ந்து அமுலில் இருக்க வேண்டும். அதற்குரிய வகையில் ஜனாதிபதியோடு பிரதமர் உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடவேண்டும்.

அப்போதுதான் காத்திரமான உறுதிமொழி ஒன்றை ஜனாதிபதியிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். மூன்று பிரதான அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றமையினால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்கும் அவ்வாறான உடன்படிக்கை மூலம் தீர்வை காணமுடியும் என்றும் அவர் பிரதமருக்கு ஆலோசனை வழங்கினார்.

அதற்கு பதிலளித்த பிரதமர் இந்த ஆலோசனையை பரிசீலிக்க முடியும் என்று கூறினார். அதேவேளை மதமாற்றம் தொடர்பாக சமீபத்தில் எழுந்த சர்ச்சை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. தற்போதைய நிலை குறித்து வாசுதேவ நாணயக்காரவும் இந்திக குணவர்த்தனவும் தமது கருத்துக்களை பிரதமரிடம் தெரிவித்தனர்.

# சமாதான சூழ்நிலையிலும் உயர் பாதுகாப்பு வலயமா?

## திருநாவுக்கரசு குற்றச்சாட்டு

(நமது நிருபர்)

உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீள்குடியமர்த்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதிய இடது சாரி முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் வீ. திருநாவுக்கரசு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரு ஆண்டுகள் சென்று விட்ட நிலையிலும் கூட தமிழ் மக்கள் இன்னமும் அகதி முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் திருநாவுக்கரசு சுட்டிக் காட்டினார்.

புதிய இடதுசாரி முன்னணி நவசமசமாஜகட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளை பிரதமர் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக கலந்துரையாடியபோதே திருநாவுக்கரசு மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். பிரதமரிடம் அவர் மேலும் எடுத்துக் கூறுகையில், யுத்தம் ஓய்ந்த பின்னரும் கூட தமிழ் மக்கள் இன்னமும் நிம்மதியாக வாழவில்லை. குறிப்பாக உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் இன்னமும் மீளக் குடியமர்த்தப்படவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னரும் கூட அவ்வாறு உயர் பாதுகாப்பு வலயம் தேவைதானா? அதனை அகற்றி மக்களை மீள குடியமர வழிவகை செய்யலாமே? இன்னமும் ஏன் அவ்வாறான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை? என்று கேள்வி எழுப்பினார்.

அத்துடன் ஐ.தே.மு அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் அது உங்களால் முடியாத காரியம் அல்ல எனவும் எடுத்துக் கூறினார். அதற்கு பதிலளித்த பிரதமர்:-

அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தபோதுதான் ஜனாதிபதி மூன்று பிரதானமான அமைச்சுக்களையும் தன் வசப்படுத்தினார். அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னரும் அவ்வாறானதொரு நிலை தொடருவது கவலைக்குரியது எனவும் பிரதமர் கூறினார். ஆனாலும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

# அறநெறிபாட ஆசிரியர்க்கு சனிக்கிழமை கருத்தரங்கு

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு இந்து கலாசாரக் கல்வி அபிவிருத்தி ஒன்றியம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சிக்கருத்தரங்கு ஒன்றினை நடாத்தவுள்ளது.

சைவப் புலவர் பண்டிதர் ரி.கிருஷ்ணப்பிள்ளை ஞாபகார்த்தமாக நடாத்தும் இந்நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இந்துக் கலாசார கல்வி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் எஸ். சந்திரகுமார். தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தியும், சிறப்பு அதிதியாக மாவட்ட கலாசார உத்தியோகஸ்த்தர் செல்வி கே.தங்கேஸ்வரியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தஜீ மஹராஜின் ஆசியுரையுடன் நடைபெறும் இந்நிகழ்வில் தமிழகத்திலிருந்து வருகை தரும் தருமபுர ஆதின முதல்வர் டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் அடிகளாரின் அருளுரையும் இடம் பெறும்.

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் கிளினிக் வசதிகள் மேலும் அதிகரிப்பு!

கல்முனை ஆதார வைத்தியசாலையில் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட்ட பின் கிளினிக் வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பயிற்சி அத்தியட்சகர் டாக்டர் கே.முருகானந்தம் தெரிவித்தார்.

கிளினிக் வசதிகள் அதிகரித்தமையால் இடப் பற்றாக்குறை நிலவுவதாக சுட்டிக் காட்டிய அவர் மகப்பேற்று வைத்திய நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர் மேலும் 15 டாக்டர்கள் அவசரமாக தேவைப்படுவதாகத் தெரிவித்தார்.

# அம்பியூலன்ஸ் வண்டி ஒப்படைக்காததால் களுவாஞ்சிகுடியில் நோயாளிகள் பெரும் சிரமம்

களுவாஞ்சிகுடி மாவட்ட வைத்திய சாலைக்கு புதிதாக அம்பியூலன்ஸ் வண்டி அண்மையில் வழங்கப்பட்ட போதும் தடுப்பு பராமரிப்பதற்காக மீண்டும் அது பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டு மூன்று மாத காலமாகியும் மீண்டும் மீள வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப் படாமையால் பல்வேறு சிக்கல்களை எதிர் கொள்வதாக வைத்தியசாலை நலன்புரிச் சங்கச் செயலாளர் எஸ். பேரின்பநாயகம் தெரிவித்தார். இருந்த பழைய வண்டி கூட புதிய வண்டியை நம்பி கராச்சியில் திருத்த வேலைக்காக ஒப்படைக்க ப்பட்டது.

தற்போது வைத்தியசா லைக்கு அம்பியூலன்ஸ் வண்டியே இல்லை. கல்முனை, கல்லாறு, ஆரையம்பதி போன்ற வைத்தியசாலைகளிலிருந்தே நோயாளிகளை அவசரமாக மட்டக்களப்புக்கு அனுப்புவதற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பெற வேண்டி இருப்பதால் நேரதாமதம் ஏற்படுகிறது. காரணம் அங்கு வண்டி இல்லாமை போன்ற பிரச்சினைகளை எதிர் கொள்வதால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே அம்பியூலன்ஸ் வண்டியை துரிதகதியில் மீள ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# இன்று புலவர் மணி நினைவுப் பேருரை

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு தமிழ் சங்கம் நடாத்தும் இலக்கிய கலாநிதி புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் நினைவுப் பேருரை இன்று வியாழக்கிழமை மு.ப.10மணிக்கு ஆனைப்பந்தி மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

மட்டக்களப்பு தமிழ் சங்கத் தலைவர் எஸ்.தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி கலந்து கொள்வார். கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு "புலவர் மணியின் சமூக நோக்கு" என்ற தலைப்பில் பேருரை நிகழ்த்துவார்.

வரவேற்புரையை மட்டக்களப்பு தமிழ் சங்கத் தலைவர் வெ.தங்கராசா நிகழ்த்த நன்றியுரையை செயலாளர் சிவாசின்னையா நிகழ்த்துவார். இந்நிகழ்வுக்கு முன் காலை மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தின் முற்சந்தியில் அமைந்துள்ள புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்படும்.

# வேலைக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை!

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு வந்தாறு மூலையைச் சேர்ந்த செல்வராசா தவம் (36வயது) என்பவர் கடந்த 04ந் திகதியன்று காணாமல் போயுள்ளதாக ஏறாவூர் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது நிறம் 5அடி உயரமுள்ள இவர் கடந்த 04.01.2004ந் திகதியன்று வவுனியா செல்வதாகக் கூறிக் கொண்டு சென்றதாகவும் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவர் மனநோயினால் பாதிக்கப்பட்டவர் என்றும் தெரியவந்துள்ளது. இவரைப் பற்றிய விபரம் அறிந்தவர்கள் செல்வராசா சரஸ்வதி வந்தாறு மூலை என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தமிழ் அலைக்குத் தெரிவித்தனர்.



தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவடி முன்மாரிக் கோட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் பாலையடிவட்டை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாபெரும் சிரம தானம் இடம் பெற்றது.

இதில் கூழாவடி, பாலையடிவட்டை உள்வீதிகள், பாடசாலை, பொது மயானம் ஆகியன துப்பரவு செய்யப்பட்டன. இச்சிரம தானத்திற்கு பாலையடி வட்டை நெல்லிக்காடு கிராமத்திலிருந்து 200க்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டதோடு இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவடி முன் மாரி கோட்ட துணை அரசியல் பொறுப்பாளர் பிரியரஞ்சன், பாலை யடி வட்டை பிரதேச அரசியல் பொறுப்பாளர் தீபன் கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.சற்குணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.(எம்.யுவராஜ்)

# ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் களுவாஞ்சிகுடி வருகை

(எஸ்.ரவீந்திரன்)

இந்து சமய விவகார அமைச்சர் ரி.மகேஸ்வரனின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்துள்ள தென் இந்திய தர்மபுர ஆதீனத்தைச் சேர்ந்த கலாநிதி ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் எதிர்வரும் 10ந் திகதி சனிக்கிழமை மு.ப.10மணியளவில் களுவாஞ்சிகுடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு வருகை தரவுள்ளார்.

அன்றைய தினம் ஆலயத்தில் நடைபெறுகின்ற பூசையிலும் இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெறவுள்ள தர்சனத்திலும் ஆன்மீகப் பேருரையிலும் கலந்து கொள்வார் என களுவாஞ்சிகுடி முகாமை ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு.வாமதேவன் தெரிவித்தார்.

# சுதந்திரக் கட்சி ஜே.வி.பி கூட்டு தலைமைப் பொறுப்பு அனுராவுக்கு!

(நமது நிருபர்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி. இடையே கூட்டு ஏற்பட்டால் அந்தக் கூட்டமைப்பின் தலை மைப் பதவிக்கு அனுரா பண்டார நாயக்கா நியமிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது.

இந்தச் செய்தியை கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது. சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. இடையோன உத்தேசக் கூட்டமைப் பின் தலைமைப் பதவியை ஏற்ப தில்லை என ஜனாதிபதி தீர்மானித் துள்ளார் என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொ.ஐ.முன்னணிக்கும் ஸ்ரீல.சு. கட்சிக்கும் தலைவியாக தான் இருப் பதுடன் நாட்டின் தலைவியாகவும் இருப்பதால் ஸ்ரீல.சு.கட்சி மற்றும் ஜே. வி.பிக்கும் இடையே உருவாகவுள்ள கூட்டமைப்புக்கு வேறு ஒருவரை தலைவராக நியமிக்க ஜனாதிபதி எண்ணுகிறார் என்றும் - கடந்த வாரம் இது தொடர்பாக நெருங்கிய ஆலோசகர்களுடன் ஆலோ சனை நடத்தினார் என்றும் ஜனாதிபதியின் யோசனையை நெருங்கிய ஆலோசகர்கள் எவரும் எதிர்க்கவில்லை என்றும் - தெரிய வந்தது.

ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுத்த கடுமையாகப் பாடுபட்டுவரும் அனுரா பண்டாரநாயக்காவுக்கு கூட்டமைப் பின் தலைமைப் பதவி வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் பதவி எதிர்க்கட்சித் தலைவ ரான மஹிந்த ராஜபக்வுக்கு வழங்கப்பட்டால் கூட்டமைப்பின் செயலாளர் பதவி மங்கள சமரவீர, நிமல் சிறிபால டிசில்வா அல்லது மைத்திரி பால சிறிசேன ஆகிய மூவரில் ஒருவருக்கு வழங்கப்பட வாய்ப்புள்ளது. மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன் பொருளாளராக நியமிக்கப் படலாம்.

# அரச ஊழியர் 60 வயது சேவை நீடிப்பாயின் விசேட தகுதி வேண்டும்

(நமது நிருபர்)

அரச சேவையில் 55வயதைப் பூர்த்தி செய்த ஒருவர் 60 வயது வரையும் சேவை நீடிப்புப் பெறுவதற்கு அவர் அது தொடர்பாகச் சில விசேட தகைமைகளை நிரூபிக்க வேண்டும் என்று நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் எம்.சி.மனனம்பெரும அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாகச் சகல திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கையொன்றை அவர் அனுப்பிவைத்துள்ளார். இதன் படி 30.:.96 இலக்கச் சுற்றறிக்கையில் குறிப்பிடவாறு 1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதிக்குப் பின்னர் ஓய்வுபெற்ற ஒருவர் நிய மனம் பெறுவதற்கு அல்லது தர முயர்வு பெறுவதற்கு பதவிக்குரிய அடிப்படைத் தகைமைகளையும் விசேட திறமைகளையும் கொண்டி ருத்தல் வேண்டும்.

இந்தத் தகைமைகளும், திறமைகளும் இருந்து பதவிக்கான வெற்றிடமும் இருந்தால் சம்பந்தப்பட்ட அரச ஊழியரை 60 வயது வரை சேவையில் நீடிப்பதற்கு அனுமதிக்கலாம் என்று அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது

# ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்தியத்துறவிகள் குரல் தரவேண்டும்

(நமது நிருபர்)

ஈழத்து இந்துத் தமிழ் மக்கள் துன்பப்படும் போது அவர்களுக்காக இந்தியாவில் உள்ள இந்திய இந்துத்துறவிகள் குரல் கொடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் சொல்லில் அட ங்காததுன்ப துயரங்களை ஈழத்து இந்துத்தமிழ்மக்கள் அனுபவித்தார்கள். அப்போ தெல்லாம் இந்தியா எமக்காக குரல்கொடுக்கவில்லை. எதிர்காலத்தில் எமக்காக குரல் கொடுத்து இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த இந்திய இந்துத்துற விகள் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், சமய சொற் பொழிவாளரான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும் கூட்டாக தமிழ் நாடு பேரூர் ஆதீனமுதல்வர் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தொண்டமனாறு சந்நிதியான் ஆசசிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்திய திருவாசக விழா சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு அருளுரையாளராக தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் கலந்து கொண்டார்.அவ்விழாவில் வைத்தே ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், செஞ் சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் மேற கண்ட வேண்டுகோளை விடுத்தனர். இது தொடர்பாக, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந் தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கூறியதாவது:-

இந்துமதம் அல்லாத ஏனைய சமயங்களைச் சேர்ந்தவர்களுக்கு அச்சமயங்களைச் சேர்ந்த பெரியார்கள் உதவி செய்வார் கள். அதேபோல, எமது இந்துமதமக்களும் எம்மைக் கேட்கி றார்கள். எதிர் வரும் காலத்தில் நாம் நல்லமுறையில் செயலாற்ற வேண்டும். அத்தோடு, சமாதானமும் உருவாகும். குஜராத்தில் பூகம்பத்தால் இந்துக்கள் பாதிக்கப்பட்டபோது இங்கிருந்து நிதி சேகரித்து அனுப்பிவைத்து நாம் துயர்துடைத் தோம். மேற்குலக நாடுகளில் சைவசமயத்தை வரவேற்பவர்கள், வளர்ப்பவர்கள் ஈழத்தமிழர்கள்தான்.

வடமராட்சிப் பிரதேசத்துக்கும் தமிழ்நாட்டிலுள்ள வேதாரணியத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் இன்றும் இருக்கின்றன. வடமராட்சியிலுள்ள வேதாரணியம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தான் இன்றும் வேதாரணிய ஆதீனத்தை நியமிக்கும் தகுதியைப் பெற்றுள்ளார்கள். அங்கு ஒரு ஆதீனத்தை நியமிக்கும் தகுதியைப் பெற்றுள்ளார்கள். அங்கு ஒரு ஆதீனத்தைத் தெரிவு செய்ய இவர்களது உதவி தேவையாக இருக்கிறது.

ஈழத்தமிழர்கள் துன்பப்படும் வேளை அவர்களுக் காக இந்தியாவில் உள்ள ஆதீனங் கள் குரல் கொடுக்கவேண்டும். எதிர் காலத்தில் இது பலம் பெறவேண்டும்.ஏனைய நாடுகளைப் போலல்லாமல் சமயத் தலைவர்களின் ஆலோசனைகளைப் பெறும் நாடு இலங்கையாகும். ஆதலால், சமாதானத்தை வலியுறுத்தவும், சமாதானத்தை உருவாக்கவும் அவ்வப்போது ஆலோசனைகளை வழங்க முன்வரவேண்டும் - என்றார்.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தமது உரையில் தெரிவித்ததாவது:-எமது நாட்டில் நிலவும் பிரச்சினை மிகவிரைவாகத் தீர்க்கப் பட வேண்டும். ஈழத்தில் சைவமக்கள் துன்பப்படும் போது இந்தியா வில் உள்ள இந்து ஆதீனம் எதுவும் குரல் கொடுப்பதில்லை. எமது தேசத்தில் எத்தனையோ கோயில்கள் முற்றுமுழுதாக அழிந்துபோயுள்ளன. எத்தனையோ பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈழத்து இந்துக்களுக்கு ஆபத்து ஏற்படும் போது இந்திய இந்துமக்கள் அவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். இந் நாட்டின் சமாதானத்துக்காக குரல்கொடுக்க வேண்டும். இந்தியாவில் உள்ள துறவிகள் சபை மூலம் எமது சமாதானத்தை வலியுறுத்தி எமக்கு ஆதரவைத் தரவேண்டும் எனக்கூறினார்.

இவர்களின் வேண்டுதல்களுக்கு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகள் தமது அருளுரையில் குறிப்பிட்டுக் கூறியதாவது:-ஆதீனத் தோடு ஆதீனம் தொடர்புடையதாக என்றும் இருக்க வேண்டும். இந் நாட்டில் குழப்பம் ஏற்பட்டபோது எமக்கு அக்கறை இருந்ததில்லை என்று சொல்லமுடியாது.

அந்நேரத்தில் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து எங்கள் ஊரில் ஒருநாள் உண் ணாவிரதம் இருந்தோம். இந்தியக் குடிமகன் நேரடியாக இங்கு எதையும் செய்ய முடியாது. அந்நாட்டு சட்டதிட்டங்களுக்கமைய இயன்றவரை இந்நாட்டில் வாழும் இந்துக்களுக்காக எதை எதைச் செய்ய முடியுமோ அதை அதை அவ்வப்போது இயன்றவரை செய்வோம். அதுமட்டு மன்றி, அந்தந்த நேரத்தில் எமது பணி என்னவோ அதை நாம் செய்வோம். ஈழத்துமக்களாகிய நீங்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

இவ்விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனும் கலந்து கொண்டு உரையாற்றினார். திருவாசக விழாவை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பபட்டன. அமைச்சர் தி.மகேஸ்வரன் பேரூர் ஆதீனமுதல்வருக்கு பொன்னாடை போர்த்த, நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தங்கப்பதக்கம் அணிவித்தார். பேரூர் ஆதீனமுதல்வர், அமைச்சர் தி.மகேஸ்வரன், சந்நிதியான் ஆச்சிரம பொறுப்பாளர் சி.மோகனதாஸ் சுவாமிகள் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட தங்கப்பதக்கத்தை நலிந்துபோன மக்களின் நல்வாழ்வுக்கு பயன்படுத்து மாறு பேரூர் ஆதீனமுதல்வர் நல்லை ஆதீன முதல்வரிடம் கையளித்தார்.

# யாழ் மண்ணை புனரமைக்க 6ஆயிரத்து 700கோடி ரூபா மதிப்பீடு!

(நமது நிருபர்)

வடக்கைப் புனர மைப்பதற்கு ஏதுவாகத் தெளிவான திட்டம் ஒன்றை அடித்தளமாத் தயாரித்துள்ளோம். எனவே, இனிமேல் எனது அமைச்சை மகேஸ்வரனோ அல்லது வேறுயாரா வதோ எடுத்து நடத்தலாம்."

புனர்வாழ்வு அகதிகள் மீள் குடிய மர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இவ்வாறு தெரிவித்தார். நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் செய்தியார்ளர் களிடம் பேசுகையில் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.யாழ். மாவட்டத்தைப் புனரமைக்க விரிவான திட்டம் ஒன்றைத் தயாரித்து புனரமைப்பதற்கு அடித்தளம் இட்டுள்ளோம். மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கும் திட்டங்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

சிறுசிறு உதவிகளை வழங்கி வீடுகளைப் புனரமைப்பதால் பயனில்லை. சிமெந்து, சீற் என வழங்கும் கீழ்த்தரமான பிரசார நடவடிக்கைக்கு நான் பொறுபபல்லன். இத் தகைய சிறுசிறு உதவிகளை வழங்கு வதை விட்டு நீண்ட காலத் திட்டம் குறித்து சிந்திக்க வேண்டும். நீண்ட காலத் திட்டம் தயாரிக்கப்பட்டுவிட் டது. இனி இந்த அமைச்சை மகேஸ்வரனோ அல்லது வேறுயாரோ பொறுப்பேற்று நடத்தலாம். அவர்களுக்குச் சிக்கல் ஏதும் இருக்காது.

யாழ்ப்பாணத்தைப் புனரமைக்க வகுக்கப்பட்டுள்ள திட்டத்தை நடை முறைப்படுத்த 6ஆயிரத்து 700 கோடி ரூபா தேவை என மதிப்பிடப் பட்டுள் ளது. வெளிநாட்டு உதவி மூலமே இதைச் சாதிக்க முடியும். வடக்கு - கிழக்கில் 89 பாலங்களைப் புனரமைக்கப் பிரிட்டன் 3கோடி ரூபா வழங்கியுள்ளது. இந்த நிதியில் இருந்து ஆயத்த நிலையில் தயாரிக்கப் பட்டிருக்கும் பாலங்கள் கொள்வனவு செய்யப்பட விருக்கின்றன. முதல் கட்டமாக 34 பாலங்கள்வந்து சேர்ந்துவிட்டன - என்றார் அவர்.

# கேணல் கிட்டு நினைவிடப் புனரமைப்பு படையினரால் தடுத்து நிறுத்தம்!

(நமது நிருபர்)

கேணல் கிட்டு நினைவிடத்தைப் புனரமைக்கும் புணி படையினரால் நேற்றுத் தடுக்கப்பட்டது. ஆயினும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவி னரின் தலையீட்டை அடுத்து புனரமைப்புப்பணி தொடர்ந்தது.

1993ஆம் ஆண்டு வங்கக் கடலில் வீரச்சாவடைந்த கேணல் கிட்டு உட்பட விடுதலைப் புலிகள் 10 பேரின் நினைவிடம் வல்வெட்டித்துறை தீருவிலில் அமைக்கப்பட்டது.கேணல் கிட்டு உட்பட 10 விடுதலைப் புலிகளின் நினைவுதினம் எதிர்வரும் 16ஆம் திகதி அஷ்டிக்கப்படவுள்ளது. இதனையொட்டி நினைவிடப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் நினைவிடப் புனரமைப்புப் பணிகளைத் தடை செய்யுமாறு வல்லெட்டித் துறைப் பொலீஸில் படையினரால் முறையிடப்பட்டது. அதனை தொடர் ந்து மேற்படி நினைவிடத்துக்கு நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு வந்த பொலீஸார் புனரமைப்புப் பணி களைத் தடுத்தனர். அந்த வேளையில் படையினரும் அதிக எண்ணிக்கையில் அங்கு குவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில்பதற்ற நிலை உருவானது.

இது தொடர்பாகப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டது. கண்காணிப்புக் குழு அதிகாரி உல்ப் சம்பவ இடத்துக்கு வந் தார்.

வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா, கடற்புலிகளின் அரசியல்துறை வடமராட்சிப் பொறுப் பாளர் கல்யாணி மற்றும் வல்வெட் டித்துறைப் பொறுப்பாளர்கி'ோர் ஆகியோர் அங்கு நின்றிருந்தனர். அவர்களுடன் கண்காணிப்புக் குழு அதிகாரி உரையாடினார்.

# தென்னிலங்கையில் சிறந்ததொரு அரசியல் தலைமைத்துவத்தை தேர்ந்தெடுக்க முடியாதுள்ளது

(நமது நிருபர்)

அமைதிப் பேச்சுகளை நடத்துவதற்கு சிங்கள தேசத்தில் நல்ல தலைமை வருமா என்று காத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அத் தகையதொரு தலைமையை - சிங்களக் கட்சியை - சிங்கள மக்கள் இன்று தேர்ந்தெடுக்க முடியாது.

சிகல உறுமய, ஜே.வி.பி. போன்ற மோசமான சக்திகளின் கூட்டு அதி காரத்துக்கு வரும் வாய்ப்புத்தான் மெல்ல,மெல் லசிங்கள தேசத்தில் உருவாகிக் கொண்டிருக்கின்றது.இவ்வாறு எச்சரித்திருக் கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் வே.பாலகுமாரன். மாமனிதர் குமார் பொன் னம்பலத்தின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் செவ்வாய் மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடை பெற் றது.

***புலிகளின் முக்கியஸ்தர் பாலகுமார்***

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார். அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் சீ. வி. கே.சிவ ஞானம் இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். மங்கள விளக்கை யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் சு. மோகன தாஸ் ஏற்றி வைத்தார். அதனைத் தொ டர்ந்து குமார் பொன்னம்பலத் தின் திருவுருவப்படத்துக்கு மாலைகள் அணிவிக்கப்பட்ட ன.நினைவுரைகளை நாவாந்துறை பங்குத்தந்தை அருட்திரு ம.சேவியர் கருணாரத்தினம், யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகன தாஸ், பல்கலை க்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் சண்முக தாஸ், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் மற்றும் யாழ். மாவட்ட அரசியல் துறைத்துணைப் பொறுப்பாளர் செம்மணன், அகில இலங்கைத் தழிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தின் செயலாளர் செந்தூரன், இலங்கைத் தழிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் த.பஞ்சலிங்கம், சர்வதேச தமிழர் மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன், காங்கிரஸ் கட்சியின் உப தலைவர் ஆ.ஈ. ஆனந்தராசா ஆகியோர் நிகழ்த் தினர்.

## மின்பொறியியலாளருக்கு சோதனை அமெரிக்கா செல்ல முற்படுகையில் தடுத்துவைப்பு.

22 வயதுடைய சவுதி அரேபியாவைச் சேர்ந்த ஜோர்த்தானிய கடவுச் சீட்டுடன் ஒரு பெண்மணி பாரிசிலிருந்து டெல்டா எயார் லைன்சுக்குச் சொந்தமான விமானத்தில் அமெரிக்காவில் உள்ள சின்சினாட்டி என்னும் இடத் திற்கு செல்லஇருந்தார். கடைசி நிமிடத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக இவர் அவ்விமானத்தில் பிரயாணம் செய்ய விடாமல் தடுத்து வைக்கப் பட்டார் அவரது மேலங்கியினுள் சில வயர்களும், மின் உபகரணங்களும் காணப்பட்டதே இதற்கு காரணமாகும். பாது காப்பு பிரிவினர் தமது தீவிரவிசாரனையின் போது அப்பெண் மணி ஒரு பொறியிலாளர் என்றும் தனது உடலமைபபை வெப்பபடுத்துவதற் காகத் தனது மேலங்கியினுள் பொருத்தப்பட்ட வெப்பமூட்டும் சாதனமே என்றும உறுதி செய்தனர்.அதன் பின் அப் பெண்மணி பிறிதொரு விமானத்தில் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.ஒசாமா பின்லேடனால



அமெரிக்காவிற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாக கடந்த சில நாட்களாக அமெரிக்கா செல்லும் விமானங்களும் பிரயாணிகளும் கடுமையான சோத னைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவது தெரிந்ததே

## தாய்லாந்தில் இராணுவச் சட்டம் அமுல்.

1993ம் ஆண்டிலிருந்து தாய்லாந்தில் பயங்கரவாதம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டுள்ளதை அடுத்து தாய்லாந்து அரசாங்கம் அந்நாட்டில் தென்மாகாணங்களில் 3 மாவட்டங்களில் கடந்த செவ்வாய் கிழமை முதல் இராணுவச் சட்டத்தை அமுல் செய்துள்ளது.

திங்கள் அன்று பட்டானில் மாகாணத்தில் இரு குண்டுகள் வெடித்ததை அடுத்து இரு பொலிசார் கொல்லப்பட்டதுடன் பல பொது மக்கள் காயமுற்றனர் குண்டு ஒன்றைச் செயலிழக்க செய்யும் போது ஒரு பொலிசார கொல்லப்பட்டதாக மறறுமொரு அறிக்கை தெரிவிக்கின்றது.21 பாடசாலைகள் எரிக்கப் பட்டதுடன் அயல் மாகாணத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலையடுத்து குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டதாக தீவிர வாதிகள் தரப்பில் கூறப்படுகின்றது.

ஒரு ராணுவ தளத்தை முற்றுகையிட்ட தீவிரவாதிகள் நான்கு தாய்லாந்து ராணுவத்தினரை கொன்றதோடு 100ற்கும் மேற்பட்ட ஆயுதங்களைக் களவாடிச் சென்றதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இராணுவச் சட்டம் அமுலாக்கப்பட்ட மூன்று மாகாணங்களிலும் முஸ்லிம்களே பெரும் பான்மையாக வாழ்கின்றனர். இம் மூன்று மாகாணங்களையும் ஒரு முஸ்லிம் பிராந்தியமாக்க கோரியே இஸலாமிய தீவிரவாதிகள் இத் தாக்குதல்களை மேற்கொள்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உலகச் செய்திகள்

## அலிகார் அருகே கால்வாயில் பஸ் விழுந்து 20 பேர் பலி!

அலிகார் அருகே சாலையில் சென்று கொண்டிருந்த ஒரு பஸ் தலைகுப்புற கவிழ்ந்து வாய்க் காலில் விழுந்தது. இதில் 20 பேர் பலியானார்கள். 13 பேர் படுகாயம் அடைந்தனர்.


அலிகார் அருகே உள்ள ஒரு ஊரில் நடைபெற்ற திருவிழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக ஒரு கிராமத்தைச் சேர்ந்த 100 பேர் ஒரு பஸ்சை வாடகைக்குப் பிடித்து சென்று கொண்டிருந் தனர்.

இந்த பஸ் அலிகாரில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் சாலையிலிருந்து விலகி தலைகுப்புற கவிழ்ந்து அருகேயிருந்த வாய்க்காலில் விழுந்தது.

இந்தச் சம்பவம் பற்றி தகவல் கிடைத்ததும் மீட்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பலியானவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. படுகாயம் அடைந்தவர்கள் அலிகார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

## சிறப்பான சேவை புரிந்தவர்களுக்கு சார்க் விருது வழங்கத் தீர்மானம்!

தெற்காசிய பிராந்தியத்தில் சிறப்பான சேவை புரிந்த தனி நபர்கள் அசாதாரண பணியாற்றிய தொண்டு நிறுவனங்கள்



தேர்ந்தெடுக்கப்பட்டு தனி நபருக்கோ அல்லது தொண்டு நிறுவனத்திற்கோ சார்க் விருது வழங்குவதென சார்க் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த 3 தினங்களாக இந்தியா உள்பட 7 தெற்காசிய நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் நேபாள அரசு சார்பில் ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த 7 தெற்காசிய நாடுகள் பிராந்தியத்தில் அமைதி, வறுமை ஒழிப்பு போன்ற முக்கியத் துறைகளில் சிறப்பான சேவை புரிந்தவர்களுக்கு சார்க் விருது அளிக்கலாம் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

நேபாள அரசின் இந்த யோசனையை சார்க் நாடுகளின் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அதன்படி சார்க் விருது வழங்க இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான அறிவிப்பு மாநாட்டின் முதலில் வெளியிடப்பட்ட இஸ்லாமாபாத் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடும் உச்சி மாநாட்டின்போது இந்த சார்க் விருது அளிக்கப்படும். அமைதி, அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, பிராந்திய ஒத் துழைப்பு போன்ற பல் வேறு துறைகளில் இந்த சார்க் விருது வழங்கப்படும். இந்த விருதுக்கான நடுவர் குழு அமைக்க ப்பட்டு, விருதுக் குரியவர்களை தேர்ந்தெடுத்து அவர்களை சார்க் நாடுகள் கவுரவிக்கும்.


## பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்க சார்க் நாடுகள் சபதம் கூட்டுப் பிரகடனம் வெளியீடு

இந்தியா-பாகிஸ்தான் உட்பட தெற்காசியாவில் பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்ட சார்க் நாடுகள் சபதம் ஏற்று உள்ளன. தாராள வர்த்தக ஒப்பந்தத்திலும் சார்க் நாடுகளின் தலைவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

சார்க் நாடுகளின் உச்சி மாநாடு இஸ்லாமாபாத்தில் 3 நாட்கள் நடைபெற்றது. மாநாட்டில் சார்க் அமைப்பில் உள்ள இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, நேபாளம், பூடான், மாலத்தீவு ஆகிய 7 நாட்டு தலைவர்களும் கலந்து கொண்டனர். மாநாடு முடிவில்நேற்று கூட்டு பிரகடனம் வெளியிடப்பட்டது. அந்த கூட்டுப் பிரகடனத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

இந்தியா-பாகிஸ்தான் உட்பட தெற்காசியாவில் பயங்கரவாதம் அடியோடு ஒழிக்கப்படும். பயங்கரவாதம் எந்த ரூபத்தில் இருந்தாலும் அதை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு தேவையான நிதி உதவியும் அளிக்கப்படும்.

தெற்காசியாவில் அமைதி, வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவைகளுக்கு சம பங்கு



அளிக்கப்படும். தெற்காசியா ஒப்பந்தத்தால் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தெற்காசியா அமைதியான பிராந்தியமாக திகழ வேண்டும். ஸ்திரமான பகுதியாக இருக்க வேண்டும். இதில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் அமைதி நிலவ வேண்டும். அண்டை நாடுகளிலும் அமைதி நிலவ வேண்டும். சார்க் நாடுகளிடையே ஏதாவது மோதல் போக்கு, கருத்து வேறுபாடு, பிரச்சினைகள் எழுந்தால் அதை அமைதியான வழிகளில் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இறையாண்மை, சமத்துவம், பிராந்திய ஒருமைப்பாடு, தேசிய சுதந்திரம், படை பலத்தை பயன்படுத்தக்கூடாது மற்றும் ஒரு நாட்டில் மற்றொரு நாட்டின் தலை



யீடு இல்லாத அடிப்படையில் நமக்குள்ள பிரச்சினைகளை அமைதியாகவும், பேச்சுவார்த்தை மூலமும் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

சார்க் நாடுகளிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலும் ஒன்றுக்கொன்று புரிந்து கொள்ளும் வகையிலும் அரசியல் ரீதியான ஆலோசனைகளை பரிமாறிக் கொள்ளவேண்டும்.

சார்க் அமைப்பில் உள்ள சிறுநாடுகளின் பாதுகாப்புக்கு உறுதி அளிக்கப்படும். அங்கு பாதுகாப்பு சம்பந்தமாக ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால அதறகு ஐ.நா. விதிமுறைகளின் படி தீர்வு காணப்படும்.

இறையாண்மை உரிமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு விஷயத்தில் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கொள்கைகளும் விதிமுறைகளும் பின்பற்றப்படும்.

தெற்காசியா மக்கள் தொடர்ந்து பயங்கரவாத அச்சுறுத்தலை சந்தித்து வருகிறார்கள். பயங்கரவாதம் எந்த ரூபத்தில் இருந்தாலும் அது கண்டிக்கத்தக்கது. அதை எந்த விதத்திலும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஐ.நா. மற்றும் சார்க் அமைப்பின் அடிப்படை விதிமுறைகளையே மீறியதுதான் பயங்கரவாதமாகும். சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு பயங்கரவாதம் எப்போதும் அச்சுறுத்தலாகத்தான் உள்ளது. பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்க சர்வதேச அளவில் பொருத்தமான விதிமுறைகளை சேர்க்க நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.

அதே சமயத்தில் பொருளாதார முன்னேற்ற பிரச்சினைகளிலும் நாம் கவனத்தை தொடர்ந்து செலுத்த வேண்டும். சார்க் நாடுகளிடையே பொருளா தார ஒத்துழைப்பை மேலும் அதிக ரிக்க வேண்டும். சிறிய மற்றும் குறைந்த வளர்ச்சியுடைய நாடுகளிடம் சலுகை அடிப்படையில் நடந்து கொள்ள வேண்டும்.

காத்மாண்டு உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுப்படி தெற்காசியா பொருளாதார அமைப்பை உருவாக்க வேண்டும். இதற்கான அரசியல், பொருளாதார சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். தெற்காசியா எரிசக்தி ஒத்துழைப்பு பற்றி ஆய்வு நடத்த வேண்டும். சார்க் நாடுகளிடையே போக்குவரத்து இன்னும் பல மடங்கு அதிகரிக்க வேண்டும். போக்குவரத்து இணைப்பு, தகவல் தொடர்பு ஆகியவற்றை அதிகரிப்பதும் இந்த பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

பொருளாதார வளர்ச்சியில் தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் கூட்டு முயற்சிகள் நம்பிக்கையூட்டும் வகையில் உள்ளன. இதை சார்க் நாடுகளின் திட்ட ஒத்துழைப்புக்கும் கொண்டு செல்வது மிகவும் முக்கியம். தெற்காசியா வளர்ச்சி வங்கி ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி பரிசீலனை செய்யப்படும். சுங்க வரியை எளிமைப்படுத்துவதோடு மத்திய வங்கிகளிடையே ஒத்துழைப்பு அதிகரிக்கப்படும்.

# நினைவின் சிகரம்

தளபதி கேட்டார்-

''என்ன மாஸ்ரர்'' இங்கே நிற்கிறீர்கள்?''

''நீங்கள் எங்கே நிற்கிறீர்களோ - அங்கே தான் நானும் நிற்கிறேன்.''

பக்குவமான ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டுத் தளபதியைப் பார்த்தார். 'மாஸ்ரர்'.

தளபதிக்கு மாஸ்ரரைப் பற்றிய எண்ணங்கள் நெஞ்சில் அடுக்கடுக்காய் எழுந்தன.

ஆங்கிலத்தில் எம்.ஏ.படித்தவர் 'மாஸ்ரர்' ஆனந்தராஜா குளித்து விட்டு முன் மண்டப நாற்காலியில், அவருக்கே உரிய சிரிப்போடு உட்காரும் போது இரவு ஏழு மணி.

மனைவி கொண்டு வந்த தேநீரைக் குடித்து விட்டு அவர் சொன்னார். ''உலகத்திலை ஒரு பெரிய படையான இந்தியப்படையை மோதுறதெண்டு புலிகள் முடிவெடுத்ததே ஒரு பெரிய வெற்றி தான்.''

கிளிநொச்சியில் 'மாஸ்ரர்' கட்டிய வீடு அது. மகிழ்ச்சியாக அந்த வீட்டை அனுபவித்து அவர் இன்னும் வாழவில்லை. அது அவர் நோக்கமும் இல்லை. தமிழீழ விடுதலைப் போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட புலிகளோடு அவர் இரண்டறக் கலந்து, நீண்ட காலமாகிறது.

'மாஸ்ரருக்கு' தமிழீழ மண்ணின் ஒவ்வொரு அங்குலமும் வீடுதான். எந்த மளித்துணியில் அவர் எங்கு நிற்பார் என்று சொல்ல முடியாது.

நீண்ட வயல் வெளிகளின் நடுவில் குறுகிய செம்மண் பாதைகள் ஊடாக - நடு இரவில் அவர் மிதி வண்டி, விடுதலைப்புலிகளை ஏற்றிப் பறக்கும்.

மேற்கே வன்னேரிக் குளம் தொடக்கம் கிழக்கே விசுவமடு வரை...

முள் குத்தி, சில்லு காற்றிழந்து போக - மிதி வண்டியை 'மாஸ்ரர்' நெடுந்தூரம் உருட்டி அலைந்த நாட்களும் உண்டு.

அளவான உயரம் - இறுக்கமான உடற்கட்டு- பொது நிறம் - மிடுக்கான மீசை - கலகலப்பான பேச்சு -ஆனந்த ராஜா 'மாஸ்ரருக்கு' நாற்பத்தி மூன்று வயதுதான்.

கிளிநொச்சியில் பள்ளிக்கூட மாணவர்களுக்கு கலங்கரை விளக்கமாய் இருந்தவர் 'மாஸ்ரர்'. மாணவர்களின் எதிர்காலம் - தன்னில் அல்ல - தமிழீழத்திலேயே தங்கியுள்ளது. என்பதைத் தெரிந்து கொண்டு, விடுதலைப் புலிகளுக்கு உறுதுணையானார் அவர். 'மாஸ்ரர்' அடிக்கடி சொல்லுவார்.

''விடுதலைப்புலிகள் எப்படியெல்லாம் அலைகிறார்கள்.... அவர்கள் நடக்க என் காலைப் பயன்படுத்துகிறேன்.

கிளிநொச்சியை ஒட்டினாற் போல் நெடிய தென்னந் தோப்புக் கிடந்தது.

சடைத்து வானத்தைத் தழுவி -பச்சைக் காடாக நிலத்தை மூடிய தென்னைகள்.

1985இல் இத்தோப்பு வரலாற்றில் தன்னை ஆழப்படுத்திக் கொண்டது.

விடுதலைப்புலிகள், முதியவர்களுக்கு இங்கே தற்காப்புப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார்கள். பதினைந்து நாட்கள் ஒரு மணித்துளியும் ஒய்வில்லாத பயிற்சி.

ஆனந்தராஜா 'மாஸ்ரர்' என்றைக்குமே அந்த நாட்களை மறப்பதில்லை.

துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடப் பழகிய காலம்...சில முதிர்ந்த நண்பர்களோடு அவரும் ஒருவராக....

யாழ்ப்பாணத்தில் கிழட்டுப் பனைகள் சூறைக் காற்றில் ஆடி நிமிர்ந்து நிற்குமே....அப்படி..... போர்க்காலத்தின் கட்டாயம்....

இரவு நேரங்களில் புலிகளின் தலைவர்களோடு உட்கார்ந்து அவர்கள் மனம் விட்டுப் பேசுவார்கள்.

பழைய தமிழீழ அரசியல் -அந்தக் கால அறப்போர் தன்னலவாதிகள் சிலர் அரசு ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு போராட்டத்துக்கு

## ஓயாத கால்கள்

வந்த கதைகள் - இவையெல்லாம் அலசப்படும்.

புலிகள் விடுதலைப் போரில் தாங்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை தெளிவாக விளக்குவார்கள்.

காற்று இதயமாக வீசும். ஓரிரு காய்ந்த தென்னை ஓலைகள் உதிர்ந்து விழும். மின்மினிப் பூச்சிகள் விளக்குத் தூக்கித் திரியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மேல் இந்தியப் படை போர்ப் பிரகடனம் செய்த நாள்.

குண்டு விச்சு விமானங்களும் - 'ஹெலிக்கொப்ரர்' களும் வானத்தில் உறுமிப் பறந்தன. 'ஷெல்'கள் - பிணக்குவியல்கள் - மரண ஓலங்கள். இந்திய வல்லரசின் கொடிய பற்கள் யாழ்ப்பாணத்தையும் கீடித்துக் குதறத் தொடங்கிய காலம்.

விடுதலைப் புலிகளின் பொறுப்பு வாய்ந்த தளபதிகளில் ஒருவர் களத்தின் முக்கிய பகுதிக்கு வந்தார்.

விடுதலைப் புலிகள் துப்பாக்கியும் கையுமாக எதிரியைத் தேடிப் பறந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு களத்தில் போராடி வந்த சில புலிகள் அடுத்த களத்துக்குப் புறப்படுவதற்கு முன்பு. அவர்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தார் ஆனந்தராஜா 'மாஸ்ரர்'

தளபதி கேட்டார்-

''என்ன 'மாஸ்ரர்' இங்கே நிற்கிறீர்கள்...?

''நீங்கள் எங்கே நிற்கிறீர்களோ - அங்கேதான் நானும் நிற்கிறேன்''.

பக்குவமான ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டுத் தளபதியைப் பார்த்தார். 'மாஸ்ரர்'

தளபதிக்கு மாஸ்ரரைப் பற்றிய எண்ணங்கள் நெஞ்சில் அடுக்கடுக்காய் எழுந்தன.

ஆங்கிலத்தில் எம்.ஏ. படித்தவர் 'மாஸ்ரர்' விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கப்டன் பண்டிதர் உயிரோடு இருந்த காலத்தில் - மேஜர் மாறனால் இயக்க வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டார். 'மாஸ்ரர்' விடுதலைப்புலி அல்ல. ஆனால் விடுதலைப் போரில் தங்களை அழித்துக் கொள்ளுகிற புலிகளுக்கு, எப்போதும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றே விரும்பினார்.....

அந்த நோக்கோடுதான் புலிகள் வழங்கிய தற்காப்புப் பயிற்சிக்கும் அவர் போனார்... போரில் இறங்கிய புலிகளை அழிக்க வந்த அந்நிய ஆக்கிரமிப்பாளனை நினைக்க நினைக்க அவருக்கு குருதி பொங் குகிறது.....

''மாஸ்ரரை'' அன்போடு நெருங்கினார் தளபதி. அவர் சொன்னார் -

'மாஸ்ரர்.... கிளிநொச்சி மக்களுக்கு உங்களைப் போல ஆதரவானவங்க இப்ப பக்கத்துலை இருந்தா நல்லா இருக்கும். நீங்கள் அங்கேதான் போகவேணும். போறதுதான் நல்லது''.

கிளிநொச்சிக்கு ''மாஸ்ரர்' அன்றே கிளம்பி விட்டார். புலிவீரர்களின் சொற்கள் மதிக்கப்பட வேண்டியவை.

தூய- அப்பழுகற்ற - நெஞ்சின் வேரில் துளிர்க்கின்றன.

*    *    *

கிளிநொச்சி பரபரப்பாயிற்று.

போரின் அடையாளங்கள் கிளிநொச்சியில் தலைகாட்டத் தொடங்கின.

இந்தியத் துருப்புக்களை ஏற்றிப் பறக்கும் 'ஹெலிகொப்ரர்கள்.

உறுமிக் கொண்ட தெருவில் இந்தியப்படை 'ட்றக்' வண்டிகள் ஒடும்.

யாழ். நகரில் கடுமையான குண்டு வீச்சாலும் 'ஷெல்' தாக்குதலாலும் பாதிக்கப்பட்ட பெண் அகதிகள் கூட்டம் ஒன்று கிளிநொச்சிக்கு வந்தது.

கண்ணீரும் கம்பலையுமாக வந்த அவர்கள் இந்தியப் படையின் கைக்கூலிகள் 'குழு' ஒன்றிடம், தெரியாமல் மாட்டிக் கொண்டார்கள்.

அந்தக் 'குழு' பெண் அகதிகளைக் கொண்டு போய் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் உட்கார வைத்தது.

குளுமாடுகளின் குழு. அவர்களோடு தமிழ்ப் பெண்கள்.

விலங்குத் தனத்தின் வெறியாட்டமும் -இழிவுகளும் - தொடங்குவதற்கு முன்பு அந்தப் பெண்களை எப்படியோ காப்பாற்றி விட வேண்டும் என்று நினைத்தார் ஆனந்தராஜா ''மாஸ்ரர்''.

நேரே அவர் மகாவித்தியாலயத்துக்குள் நுழைந்தார்.

எத்தனையோ ஆண்டுகளாக 'மாஸ்ரர்' பாடம் கற்றுக் கொடுத்த பள்ளிக்கூடம் அது.

அவர் எழுதிய கரும்பலகைகள். அவர் உலாவிய வகுப்பறைகள். அதே மேசைகள் - நாற்காலிகள்.

எத்தனை மாணவர்கள் இந்தப் பள்ளிக் கூடத்தில் மானமுள்ள வீரர்களாய் உருவாக்கியிருக்கின்றார் 'மாஸ்ரர்'.

என்றுமே நீதிகளாலும் அறங்களாலும் பண்பாடுகளாலும் நிறைந்து போயிருந்த அந்த மகாவித்தியாலயத்தில் சேட்டைகளும் அசிங்கங்களுமா...? மாஸ்ரரால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

ஆனந்தராஜா 'மாஸ்ரர்' தலையிட்டார். பெண் அகதிகளை மகாவித்தியாலயத்திலிருந்து வேறோர் இடத்துக் அழைத்துச் சென்றார். வெறியர்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றின மாதிரித்தான்.

ஒரு 'குளுமாடு' பள்ளிக்கூட வாசலில் மாஸ்ரரை முட்டி மோதிக் கொண்டு போயிற்று.

இந்த முரட்டுத் தனங்கள் எல்லாம் 'மாஸ்ரருக்கு' இப்போது பழகிப் போனவை.

கடலில் இறங்கிவிட்ட படகா அலைகளைப் பற்றிக் கவலைப் படும்.

'மாஸ்ரருக்கு' நன்றாகவே தெரிந்தது - இந்தக் 'குழுக்களுக்கு' கொலைதான் கொள்கை.

ஆனால்.....

தனக்குள்ளேயே அவர் சொல்லிக் கொண்டார்; நான் எதற்கும் ஆயத்தமாகவே இருக்கிறேன்.

*    *    *

(தொடரும்...)

***நன்றி:-வில்லுக்குளத்துப் பறவைகள்.***

# வியாழன் விருந்து


யுவராஜ்

## அறிவுப் பசி -10

01. இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் ஜனாதிபதி யார்?
02. I.P.K.F எனும் இந்திய சமாதானப் படை இலங்கையிலிருந்து எப்போது வெளியேற்றப்பட்டது.
03. இலங்கை இந்திய ஒப்பந்தம் எத்தனையாம் ஆண்டு எவர்களால் கைச்சாத்திடப்பட்டது?
04. உலகின் உயரமான கோபுரம் எது?
05. தமிழின உயிர்க் கொலை நாள் எப்போது பிரகடனப்படுத்தப்பட்டது?
06. ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுச் செயலாளர்யார்?
07. இலங்கையில் இதுவரை கூடுதலான ஓட்டம் பெற்ற கிரிக்கெட் வீரர் யார்?
08. 1994ல் ஆசிய விளையாட்டுப் போட்டி எங்கே நடைபெற்றது?
09. தமிழ் வளர்த்த முச்சங்கங்கள் எங்கிருந்து தமிழை வளர்த்தன?
10. பத்துப் பாட்டு நூல்கள் எவை?

## அறிவுப்பசி 08இன் விடைகள்

01) கிறீன்லாந்து.
02) 1857இல்.
03) 1985.
04) 141 (5-1=4, 17-5=12, 53-17=36)வித்தியாசம் மூன்று மடங்கால் அதிகரிக்கின்றது.
05) கொட்னி வோல்ஸ்.
06) ரிக்டர்.
07) 9நாணயங்களையும் 3நாயணங்கள் கொண்ட 3 தொகுதியாகப் பிரித்து ஒரு தொகுதியை தராசின் வலப்பக்கத்திலும், இன்னொரு தொகுதியை இடப்பக்கத்திலும் வைத்து (மூன்றாவது தொகுதி வெளியில் இருக்கும்) நிறுத்தால் எந்தத் தொகுதியினுள் உள்ள நாணயங்களில் ஒன்றை வலது தட்டிலும் இன்னொன்றை இடது தட்டிலும் (மற்றதை வெளியிலும்) வைத்து, நிறுத்தால் நிறை குறைந்த நாணயம் உள்ள தட்டு மேலெழும் அல்லது, வெளியில் உள்ள நாணயம் நிறை குறைந்ததாய் இருக்கும்.
08) இலண்டனில்.
09) 1980.
10)




ஒவ்வொரு பகுதியிலும் உள்ள எண்களின் கூட்டுத் தொகை 26 ஆகும்.

*அறிவுப்பசி 08இல் பரிசு பெறும் அதிஸ்டசாலி*
*எஸ். கமலநாதன்*
*ஊறணி*
*மட்டக்களப்பு.*

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

1. ந.தர்சினி
பிரதான வீதி
கல்முனை.

2. க.பிரதீபா
மார்க்கட் வீதி
பாண்டிருப்பு.

3. உ.பிரவீனன்
கரையாக்கன் தீவு
கன்னன்குடா.

4. பு.கௌதனன்
கமலி வீதி
கோட்டைக்கல்லாறு.

5. ச.அஸ்வினி
மகாவிஷ்னு வீதி
வந்தாறுமூலை.

6. ரி.திலக்ஷன்
பிரதான வீதி
களுவாஞ்சிகுடி.

7. ச.கோபிகா
எல்லை வீதி
குருக்கள் மடம்.

8. வ.பிரகலாதன்
வார்றோட்
மட்டக்களப்பு.

9. க.சோபிகா
பிரதான வீதி
நாவற்குடா.

10. இ.பிரசாந்தினி
நொச்சிமுனை
மட்டக்களப்பு.

**விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 14-01-2004 விடைகள் வந்து சேர வேண்டிய முகவரி**
**வியாழன் விருந்து**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை.**

# இந்திய அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் சமநிலையில் முடிந்தது சாதனைதான்

*ஓய்வு பெற்ற ஆஸி. தலைவர்*

இந்தியாவிற்கு எதிரான 4-வது டெஸ்ட் போட்டியை சமநிலையில் முடித்ததே மிகப்பெரிய சாத னை என்று ஓய்வு பெற்ற அவு ஸ்திரேலிய அணியின் தலை வனான ஸ்டீவ்வோ தெரிவித்து ள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையே சிட்னியில் செவ்வாய் கிழமை முடிந்த கடைசி மற்றும் 4-வது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. இந்த போட்டியின் 2-வது இன்னிங்சில் ஸ்டீவ் வாஹ் எடுத்த 80 ஓட்டங்கள் அவுஸ்திரேலியா. அணி போட்டி யை சமநிலையில் முடிக்க மிக வும் உதவியது.

கடினமான இந்த தொட ரில், 4-வது போட்டியை டிராவில் முடித்ததே மிகப்பெரிய சாதனை என்று வோ குறிப்பிட்டார்.

தேநீர் இடைவேளையின் போது 204/4 என்ற நிலையில் இருந்த அவுஸ்திரேலிய அணியை வாஹின் அபார விளையாட்டு காப்பாற்றியது.

இந்த டெஸ்ட் போட்டி முடிந்ததும் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பேசிய ஸ்டீவ் வோ பேசியபோது கூறியதாவது, 4-வது டெஸ்டை சமநிலையில் முடித்தது என்பதே மிகப்பெரிய சாதனை யாகும்.. இந்த தொடர் ஒரு கடின மான தொடராக இருந்தது. இந் தியா மிகச் சிறப்பாக விளை யாடியது. இந்தத் தொடரில் இந் திய அணி கொடுத்த சவால் எங்களுக்கு மிகவும் பிடித்த மான தாக இருந்தது.

இந்த சவால் மிகவும் அற்புதமான சவாலாகும். பார்டர்-கவாஸ்கர் டிராபியை தக்க வைத் துக் கொண்ட கங்குலிக்கும், இந் திய அணிக்கும் எனது வாழ்த்து க்கள்" என்று ஸ்டீவ் வோ கூறினார்.

18 வருட காலம் கிரிக் கெட் வாழ்வை நடத்தியுள்ள ஸ்டீவ் வோ 168 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி சாத னை படைத்துள்ளார்.

பரிசளிப்பு விழாவின் போது பேசிய ஸ்டீவ் வோ, சக வீரர்களுக்கும், தேர்வுக் குழுவுக்கும் கிரிக்கெட் அவுஸ்தி ரேலியாவுக்கும் நன்றி சொல் வதற்கும் இந்த வாய்ப்பை பயன் படுத்திக் கொண்டார்.



எனது டெஸ்ட் கிரிக் கெட் வாழ்வை நான் துவக்கிய போது முதல் டெஸ்டில் சொற்ப ஓட்டங்களையே எடுத்தேன். ஆனால் இப்போது நான் 168 டெஸ்ட் போட்டிகளில் விளை யாடியுள்ளதை எண்ணிப் பார்க் கிறேன். இது எனக்கு மிகப்பெரிய போனஸ். என் மீது நம்பிக்கை வைத்து, என் திறமை மீது நம்பிக்கை வைத்து என்னை தேர்வு செய்த தேர்வுக் கமிட் டிக்கு மிக்க நன்றி என்று பலத்த கைதட்டல்களுக்கு மத்தி யில் ஸ்டீவ் வோ பேசினார்.

சிட்னி மைதானத்தில் கூடியிருந்த ரசிகர்களுக்கு மத்தி யில் ஸ்டீவ் வோன் குடும்ப மும், அவரது சகோதரர் மார்க் வாஹூம், அவுஸ்திரேலியப் பிரத மர் ஜான் ஹோவர்டும் இருந் தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தன்னுடைய உரையில் ஸ்டீவ் வோ மேலும் கூறுகை யில், அவுஸ்திரேலிய அணிக்கு தலைவராக இருந்தது எனக்கு மிகவும் பெருமை அளிக்கிறது. திறமையான வீரர்களைக் கொண்ட அணியாக அவுஸ்தி ரேலியா இருந்ததால் எனது வேலை மிகவும் சுலபமானதாக இருந்தது. என்னுடைய கிரிக்கெட்




வாழ்வில் நிறைய சாதித்து விட்ட தாகவே நான் இருக்கிறேன் என் றும் ஸ்டீவ் வோ கூறினார்.

ஆட்டநாயகன் விருது பெற்ற சச்சின், தொடர்நாயகன் விருதுபெற்ற ராகுல் டிராவிட், டிராபியை பெற்ற தலைவர் கங் குலி ஆகியோரும் தங்களு டைய உரையில் ஸ்டீவ் வோ ஹை மிகவும் புகழ்ந்து பாரா ட்டினர். இவர்களது உரையை கேட்ட வோ, அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக தலையை அசைத்த வண்ணம் இருந்தார்.

# இளம் வீரர்களை கோண்ட இந்திய அணி சிறப்பாக அவுஸ்திரேலியாவில் விளையாடியுள்ளது.

*–சௌரவ் கங்குலி–*

இந்திய அணி மீது விமர்சனங்கள் எழுந்து இருந்தா லும் இளம் வீரர்களைக் கொண்ட அணியாக இருக்கும் இந்திய அணி, அவுஸ்திரேலியா வுக்கு எதிராக நல்ல முறை யில் விளையாடும், போட்டியிடும் என்ற நம்பிக்கை தனக்கு எப் போதுமே இருந்ததாக இந்திய அணியின் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை 1-1 என்ற சமநிலையில் முடித்து, பார்டர்-கவாஸ்கர் டிராபியை தக்க வைத்துக் கொண்ட பின்பு பேட்டி யளித்த கங்குலி கூறுகையில், இளம் வீரர்களைக் கொண்ட இந்திய அணி அவுஸ்திரேலியா வுக்கு எதிராக சிறப்பான முறையில் போட்டியிடும் என்ற நம்பிக்கை எப்போதுமே என்னி டம் இருந்தது. கடந்த 5 வருட காலமாக எல்லா அணிளுக்கும் எதிராகவும் நாம் சிறப்பாக விளை யாடி வருகின்றோம்.

இந்த தொடரில் விளை யாட வருவதற்கு முன்பு கடுமை யான விமர்சனங்கள் இந்திய அணி மீது எழுந்தன. இந்த விமர்சனங்களுக்கு, தற்போது சரியான பதில் கொடுக்கப்பட்டு விட்டதாக நினைக்கிறேன். நம் மால் நிச்சயம் சிறப்பாக விளை யாட முடியும் என்ற நம்பிக்கை எப்போதுமே எங்களிடம் உள்ளது.



எங்கள் மீது எங்களுக்கு எப்போ துமே அதிக நம்பிக்கை உள்ளது" என்று கூறிய கங்குலி, நடை பெற்று முடிந்த அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரானது இந்திய அணிக்கு ஸ்பெஷ லானது என்றும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து கங்குலி கூறுகையில், கடந்த 4,5 வருடங்களாக அவுஸ்திரேலிய அணி மிகச்சிறப்பாக விளையாடி வருகிறது. ஏறக்குறைய அனை த்து அணிகளுக்கும் எதிராகவும் அவுஸ்திரேலிய. அணி மிகச் சிறப்பாக விளையாடி வந்துள்ளது. இப்படிப்பட்ட நிலையில் அவர்க ளுக்கு எதிராக நாம் சிறப்பாக விளையாடி இருப்பது ஸ்பெஷ லான ஒன்று தான் என்று கூறி னார்.

சிட்னியில் நடை பெற்ற கடைசிநாள் ஆட்டமானது விளையாடப்பட்ட விதம் வருத்த மளிப்பதாக இருந்தது என்றும், பந்துவீச்சாளர் இன்னும் சிறப்பாக செயல்பட்டு இருந்திருக்க வேண் டும் என்றும் கங்குலி கூறினார்.

கடைசி நாள் ஆட்ட த்தின் போது நாம் இன்னும் சிறப்பாக விளையாடி இருந்தி ருக்க வேண்டும். நீண்ட இடை வெளிக்குப் பின்னர் கார்த்திக் விளையாடியுள்ளார். கும்ளே மிகச் சிறப்பாக அபாரமாக பந்து வீசியுள்ளார். ஆனால் பதானின் பந்துவீச்சு தன்னிகரற்றதாக சிறப் பான முறையில் இருந்தது என்று கங்குலி கூறினார்.




# தொலைபேசித் தொல்லைகள்.

நாகரிகம் வளர்ச்சிய டைய நாளுக்கு நாள் மக்களுக்கு வசதிகளும் வாய்ப்புக்களும் பெருகிக் கொண்டே செல்கின்றது. அந்த வகையிலே மக்கள் அனை வரும் தங்களது வாழ்க்கையினை நவீனமயப்படுத்தும் எண்ணங்க ளுடன் அவர்களுக்குத் தேவை யானவற்றைத் தங்களது வீடுகளி லேயே வைத்துக்கொள்ள வேண்டு மென்ற நோக்கோடு தங்களது வீடுகளில் தேவையான சில வசதிக ளைச் செய்து கொள்கின்றனர். அந்த வகையில் தொலைபேசித் தொடர்பும் ஒன்றாகும்.

தற்போது அனேகமான வீடுகளில் தொலைபேசி காணப்படு கின்றது. இதனால் டெலிகொம் இலாபத்தைப் பெற்றுக்கொள்கி ன்றதாயினும் சிலருக்கு அவை எரிச்சலூட்டுபவையாகவும் அமை கின்றது. தொலைபேசியானது வீடுகளில் அவசியமாகத் தேவைப்ப டுவது தான். இருந்தும் அவற்றை ஒருஅவசர தேவைக்கோ, அல்லது முக்கிய தேவைகளுக்கோ பயன்ப டுத்துவது சிறந்தது.

இதைத் தவிர சிலர் தொ லைபேசியின் மூலமாக தமக்கு வேண்டாத ஒருவரை மிரட்டுவதும், பெரிய பெரிய முதலாளிமாரிடம் பணம் பறிப்பதும் நாட்டில் நடப்பதே. இது தவிர சிலர் பெண் பிள்ளைகள் இருக்கும் இடங்களுக்கு எப்படி யோ அவர்களின் தொலைபேசி இலக்கத்தை அறிந்து அடிக்கடி போன் செய்து அவர்களை மிரட் டுதல், அவர்களது பெற்றோரை மிரட்டுதல் சில வீடுகளுக்கு இரவு வேளைகளில் எடுத்து அவர்களது தூக்கத்தைக் கலைத்து அதில் அவர்கள் மகிழ்ச்சி கொள்ளுதல் இப்படியானவைகளெல்லாம் நடை பெறுகின்றன.

எனவே இவ்வாறானவர்க ளுக்கு தொலைத் தொடர்பு கொடு க்காமல் ஓர் அலுவலகத்தில் வே லை செய்பவர்களுக்கோ அல்லது முக் கியமானவர்களுக்கோ தொ லை பேசித்தொடர்பு கொடுக்கலாம்.

ஆகவே டெலிகொம் இத னைக் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அலை யின் தேடலினுடாக கூறுகின்றேன்.

*நலன்விரும்பி மட்டக்களப்பு.*

# பாண் வியாபாரிகளின் அவலக்குரல்

நாங்கள் பத்து வருடங் களுக்கு மேலாக களுவாஞ்சிகுடிப் பொதுச் சந்தையில் பாண், வணிஸ் வியாபாரம்.செய்து வருகின்றோம். எங்களில் அதிகமானோர் பெண்கள் வசதி குறைந்தவர்கள். இப்பகு தியில் நடந்த அனர்த்தங்களால் பல இழப்புக்களைச் சந்தித்த வர்கள்.

இச்சந்தையில் ஒவ் வொரு வருடமும் வரும் குத்த கைக்காரர்கள் எங்களை அனாதை களைப் போல் ஓட ஓட விரட்டுகி ன்றார்கள். நாங்களும் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு இடத்தைப் பிடித்து வியாபாரம் செய்து வந்தால் அந்த இடங்களை வேறு வியாபாரி மாருக்குக் கொடுப்பதற்காக விரட் டிக் கொண்டே இருக்கிறார்கள்.

நாங்கள் இந்தக் கிராம த்திலே எங்களுக்கு இங்கு இடமி ல்லை எங்கேயோ இருந்து பிறந்த வர்கள் இப்பொழுது வந்தவர்களு க்கெல்லாம் வீதியிலே ...ாரம் அடித்துக் கொடுத்து பாதுகாப்பும் வழங்குகிறார்கள். இந்த அநியாய ங்களைக் கேட்க இங்கு எவரும் இல்லையா?

*பொதுச்சந்தை பாண் வியாபாரிகள்.*

# களுவாஞ்சிகுடி பிரதான வீதியில் காணி விற்பனை

களுவாஞ்சிகுடிப் பொதுச்சந்தை, களுவாஞ்சிகுடி வைத்தியசாலை களுவாஞ்சிகுடி தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி ரெலிகொம் ஆகிய வற்றிற்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் உள்ள நிலத்தை காத்தான்குடி வியாபாரிகளுக்கு விற்பதாக அறிகிறோம். இதனை உரிய வர்கள்தடை செய்வார்களா? என்று களுவாஞ்சிகுடி மக்கள் பரபரப்பாகப் பேசிக் கொள்கிறார்கள். தயவு செய்து இதனைப் பிரசுரிக்குமாறு அன்பாக வேண்டிக்கொள்கின்றோம்.

*அலையின் தேடல் வாசகர்கள்.*

*அன்புடன் வாசகர்களுக்கு!*

எமது தாயக மண்ணில் அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உங்கள் பகுதிகளில் செய்ய வேண்டிய அபிவிரு த்திகள், புறக்கணிப்புகள், அதிகாரிகளின் ஊழல்கள், மோசடிகள், இன்னும் எத்தனையோ சம்பவங்களை மனதிற்குள் பூட்டி வைக்க வேண்டாம்.

தமிழ் அலையில் வெளிக்கொணருங்கள். தமிழ் அலையில் "அலையின் தேடல்" பகுதி உங்கள் ஆக்கங்களை பிரசுரிப்பதற் காகக் காத்திருக்கின்றது. அதன் வாயிலாக வெளிவருவதால் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

எனவே உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி
அலையின் தேடல்,
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.

தமிழ்அலை
Tamilalai
தினசரி

# காணி வழங்குவதில் இழுபறி தபாலகம் அமைவதில் தாமதம்

(ந.கிரிதரன்)

மட்டக்களப்பு கோட்டை முனை தபாலகத்திற்கென சகல வசதிகளுடன் கூடிய கட்டிடத்தை நிர்மாணிக்க தபால் திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்ய முன் வந்த போதும் மண்முனை வடக்கு பிரதேச செயலகம் உரிய காணியை வழங்குவதில் காட்டும் தயக்கம் காரணமாக கடந்த இரு வருடங்களாக இழுபறி நிலை தொடர்ந்து வருகிறது.

அரசடி பொது நூலகத்திற்கு அருகில் பார் வீதியில் கோட்டைமுனை தபாலகத்தை நிர்மாணிக்க பொருத்தமான காணியை வழங்க பிரதேச செயலகம் ஏற்கனவே இணங்கிய போதிலும் தற்போது அக்காணியை பொலிசாரின்பாவனைக்கு வழங்கியுள்ளது.

அரசடி பொது நூலகத்தில் தங்கியுள்ள பொலீசாரை வேறு இடத்திற்கு மாற்றுவதாயின் பொருத்தமான காணியை வழங்குமாறு விடுத்த வேண்டுகோளையடுத்து அக் காணி தற்போது பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரு வருடங்களாகியும் பொலிசார் பொது நூலகத்தை விட்டு வெளியேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் வசதி கருதி மேற்படி காணியை தபாலகத்திற்கு வழங்குமாறு பொது நிறுவனங்கள் கோருகின்றன.

தற்போதைய சூழலில் தபால் திணைக்களம் ஒதுக்க முன் வந்த நிதியை உரியவாறு பயன்படுத்த ஆவனசெய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# சப் இன்ஸ்பெக்டர் கொலை வழக்கிலிருந்து எதிரி விடுதலை

(ந.கிரிதரன்)

சப்- இன்ஸ்பெக்டர் ஒருவரின் கொலை தொடர்பான வழக்கிலிருந்து எதிரியை மட்டக்களப்பு நீதவான் எம்.எச்.எம். அஜ்மீர் விடுதலை செய்தார்.

மட்டக்களப்பில் கடமை புரிந்த சப்-இன்ஸ்பெக்டர் எஸ்.யோகேந்திரன் என்பவரை 11.05.2001 அன்று பார் வீதியில் வைத்து கொலை செய்ததாக களுவாஞ்சிகுடி வலயக் கல்விப் பணிமனை சிற்றூழியரான பொடிசிங்கம் சண்முகம் என்பவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து இரண்டு மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பின்னர் சட்டமா அதிபரின் ஆலோசனைப்படி சாதாரண சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சம்பவத்தின் போது காயப்பட்டவர், சம்பவம் நடந்த இடத்திற்கு அருகிலுள்ள கடைச் சொந்தக்காரர் மற்றும் இறந்தவரின் உறவினர் ஆகியோரின் சாட்சியங்கள் போதியளவில் சமர்ப்பிக்காததால் எதிரியை விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அரச தரப்பில் சட்டத்தரணி எஸ்.சூசைதாசன் அவர்களும், சந்தேக நபர் தரப்பில் சட்டத்தரணி பேரின்பம் பிரேம்நாத் ஆகியோரும் ஆஜரானார்கள்.

**ஓட்டமாவடி...**

பை அஜ்மீர் அப்துல் ராய்தீன் ஆகியோரின் சாட்சியங்களையும் பொலிசார் பதிவு செய்துள்ளனர்.

25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் இம்மாதம் 14ம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

சந்தேக நபரான குடும்ப பெண்மணியின் கணவர் கட்டாரில் வேலை பார்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

**கிழக்கு...**

உறுப்பினர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் இடதுசாரிக் கட்சிகளின் பிரதிநிதிகள், சிங்கள இலக்கியதாரிகள், கலைஞர்களுக்கும் அழைப்பு விடுக்க ஏற்பாட்டாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

**மட். ...**

தற்போது சமாதான சூழல் நிலவி வருவதால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மட்டுப்படுத்திய சேவைகளையே வழங்குகிறது.

**யுத்த...**

பிரதம மந்திரிக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் எதிர்வரும் பெப்ரவரி 22ம் திகதியுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிறது.

மேற்படி ஒப்பந்த காலத்தில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டவுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்க வேண்டும் என்றும் மேற்கொண்டு மேற்படி ஒப்பந்தத்தின் பொறுப்பை தாம் ஏற்க முடியாது என்று அரசாங்கம் கூறிவந்தது குறிப்பிடத்தக்கது.

படைத்துறை அமைச்சு அரசாங்கத்தின் கைகளில் இல்லாமல் சமாதான நடவடிக்கைகளுக்கு அர சாங்கம் பொறுப்பேற்பதற்கு ஆட்சேபித்திருப்பதன் காரணம் நாட்டில் தற்போது சமாதான நிலைப்பாட்டில் ஏற்பட்டிருக்கும் நிச்சயமற்ற தன்மையினால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து முழுமையாக விலகிக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்சமயம் நடைமுறையில் இருந்து வரும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செல்லுப்படியற்றதாகின்றது என்றும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் யுத்தத்திற்குச் செல்லாத விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கோ அல்லது யுத்த நிறுத்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடிபதென்றாலும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீள் பரிசீலனை செய்யபட வேண்டும் என்பது இன்றியமையாதது.

**நயினாக்காட்டில்...**

ணமாக வெளியேறிவிட்டனர்.

இவ்வாறு தமிழ்த் தொழிலாளர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பாக விடுதலை புலிகளின் வீரமுனை அரசியல்துறை பொறுப்பாளர் பிள்ளைவாணனின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் சில முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுவதாக அண்மையில் தமிழ்அலை செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஆயுதப் பயிற்சி வழங்கும் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் தமிழ் முஸ்லிம் மக்களின் இனஐக்கியத்தை சீர்குலைக்க மேற்கொண்ட சதி முயற்சியாகவிருக்கலாம் என நம்பப்படுகிறது.

**சித்தாண்டியில்...**

இதேவேளை கோரகல்லிமடுவில் இயங்கி வந்த நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் நன்மை கருதி தற்காலிகமாக கிரான் ரமண மகரிஷி மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், சித்தாண்டி நுண்கலைக் கல்லூரியில் பயில விரும்புபோர் தமது விண்ணப்பங்களை செயலாளர், நால்வர் இல்லம் சித்தாண்டி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# பட்டிருப்பு தேசிய பாடசாலைக்கு விரைவில் இசைக் கருவிகள்

(எஸ். பேரின்பராசா)

பட்டிருப்பு தேசிய பாடசாலைக்கு அமைச்சர்களான சுவர்ணிமல ராஜபக்ஷ, கருணாசேன கொடிதுவக்கு ஆகியோரின் சிபார்சின் பேரில் இசைக்கருவிகள், தளபாட ங்கள் வழங்குவதற்கான உத்தர வுக்கடிதத்தை பெற்றுள்ளதாக உறுப்பினர் ஞா.கிஷ்ண பிள்ளை தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கான கதிரைகள்100, மேசைகள்50, பேண்ட் வாத்திய இசைக் கருவிகள்200, சீருடைகள் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி, ஒளிப்பதிவு நாடாக் கருவி போன்றவற்றிக்கான அனுமதியையே பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இசைக் கருவிகளான றம்.3 கருவிகள், அவற்றில் அடங்கும் என்றார்.

## ஓராண்டு நினைவஞ்சலி

## லெப்டினன் தாரினி

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 03 |  | 07 |
| 01 | | 01 |
| 1985 | | 2003 |

வேல்முரு அனுசூயா
கன்னன்குடா

பேரினவாதிகளின்
பேயாட்ட இனவெறியை
போர்த்திறன் வலிமையால்
தாக்கிடும் தாகமும்
தாயக உணர்வும்
தமிழீழக் கனவும்
தாரனி நெஞ்சினிலே....
ஆனால்....
நோயவன் உன்னுடலை
நேசமாய் கொன்றதனால்
நோகின்றதே எம் மனங்கள்
நேசிக்கின்றோம் உம்முணர்வை!

குடும்பத்தினர்
கன்னன்குடா

இன்னும் 13 தினங்களில்..........

வீரம் விளை நிலம், வெற்றிப் பெரும் தளம்

மட்டக்களப்பில்

மாபெரும் “பொங்குதமிழ்”

கிழக்குப் பல்கலைக்கழக வளாக விளையாட்டு முற்றத்தில்

21.01.2004 - புதன், காலை 10.00 மணி

சங்கத் தமிழினமே வங்கக் கடல் போல் சங்கமிப்போம் திரண்டு வாரீர்!
எங்கள் உரிமைக்குரலால் உலகத்தை விழிக்கவைப்போம் உணர்வுகளைத் தாரீர்!!

இப் பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 08.01.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.